பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 26 | புதன்கிழமை | 09.04.2025 | அதிர்வு 247

## மீண்டும் சிறையில் அடைக்கப்பட்ட வியாழேந்திரன்



(எஸ்.ஜினோதன்)

இலஞ்ச வழக்கில் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் 06



# பிள்ளையான் கைது!

(எஸ்.ஜினோதன்)

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான அவர், மட்டக்களப்பில் உள்ள கட்சியின் தலைமைக்காரியாயத்தில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். 06

# தேசபந்துவை பதவி நீக்க விசாரணைக் குழு: நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றம்



(எஸ்.ஜினோதன்)

பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நேற்று நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பான வாக்கெடுப்பு நேற்று மாலை 5.45 மணிக்கு இடம்பெற்றது. இதில் குறித்த தீர்மானத்துக்கு ஆதரவாக 151வாக்குகள் அளிக்கப்பட்டன. இதற்கு எதிராக எந்த வாக்கும் அளிக்கப்படவில்லை.

பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவை நியமிப்பது தொடர்பான பிரேரணை முன்வைப்பதற்கான தீர்மானம் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் 115 பேரின் 06




உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் இள வயது வேட்பாளர்களின் வயதை உறுதிப் படுத்தும் பிறப்புச் சான்றிதழ் ஆவணம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை காலை மேல் முறையீட்டு நீதிமன்றமும் மாலையில் உயர் நீதிமன்றமும் ஒன்றுக்கு ஒன்று முரணான – மாறுபாடான – உத்தரவை வழங்கியிருக்கின்றமை தெரிந்ததே.

இந்தப் பின்புலத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்திடம் தேர்தல் ஆணையம் மேன்முறையீடு செய்யும் என்று கடந்த சனியன்றே குறிப்பிட்டு இருந்தோம்.

ஆயினும் நேற்று செவ்வாய்க்கிழமை கடந்தும் இந்த விடயம் நடக்கவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பின் பிரதிகளை பெற்றுக் கொள்ளுதல், அவை தொடர்பில் சட்டமா அதிபர் திணக்கணத்தில் உரிய மேன்முறையீட்டு ஆவணங்களைத் தயாரித்தல் போன்றவற்றில் தொடர் தாமதம் நிலவிய காரணத்தினால் நேற்று வரை மேன்முறையீடு சாத்தியமாகவில்லை 06

## வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில்

# சுமார் 12 கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் ஒருவர் சிக்கினார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சுமார் 305 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை கடற்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகு ஒன்றைக் கடல் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவதானித்து குறித்த படகைக் கடலினுள் வழிமறித்து சோதனையிட்டபோது அதற்குள் கேரள கஞ்சா பொதிகள் காணப்பட்டன.

அதனை அடுத்து படகில் இருந்த வடமராட்சி கிழக்கு, முள்ளியான் பகுதியைச் சேர்ந்த படகோட்டியைக் கைது செய்த கடற்படையினர் கஞ்சா போதைப்பொருளுடன் படகையும் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா கடல் நீரில் நனைந்த நிலையில் காணப்பட்டது என்றும், ஈரத்துடன் அதன் எடை 304 கிலோ 600 கிராம் என்றும் தெரிவித்த கடற்படையினர், அதன் பெறுமதி சுமார் 12 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா மற்றும் படகு என்பவற்றுடன், கைது செய்யப்பட்ட நபரையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

# பிணையில் விடுவிக்கப்பட்டும் விளக்கமறியலில் சாமர சம்பத்



நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நிதி மோசடி குற்றச்சாட்டில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சாமர சம்பத் தசநாயக்கவுக்கு நேற்று பிணை வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், பதுளை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கில் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதாக நீதிமன்றம் உத்தரவிட்டதால் தொடர்ந்தும் அவர் சிறையிலிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது




# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு பொருள்களின் விலை குறைப்பு

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உள்ளிட்ட 500 வகையான பொருள்களின் விலைகளை குறைத்துள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்தது.

அரிசி, டின் மீன், சிவப்பு சீனி, பெரிய வெங்காயம் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய பொருட்ள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

மேற்படி பொருள்களை சந்தை விலையை விடவும் மிகக்குறைந்த விலையில் சதொச ஊடாக இம்மாதம் முழுவதும் பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# பெறுமதி சேர்க்கப்பட்ட வரி திருத்த சட்டமூலம்

## உயர்நீதிமன்றின் வியாக்கியானம் சபையில் அறிவிப்பு

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி திருத்த சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றின் வியாக்கியானம் சபாநாயகருக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக பிரதி சபாநாயகர் நேற்று சபையில் அறிவித்தார்.

அதன்படி அரசமைப்பின் கீழ் இந்த சட்டமூலம் தொடர்பான தீர்மானம் எதனையும் உயர் நீதிமன்றம் மேற்கொள்ளவில்லை என்று சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த சட்டமூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களும் மனுதாரர்களால் மீள பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அந்த மனுக்களை தொடர்ந்தும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாதிருக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்த அறிவிப்பு நேற்று நாடாளுமன்ற அமர்வின் உத்தியோகபூர்வ நடவடிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று சபாநாயகர் அறிவுறுத்தியுள்ளார் என பிரதி சபாநாயகர் அறிவித்தார்.





# பிரதி அமைச்சர் நளின் ஹேவகேவின் சர்ச்சைக் கருத்துக்கு நளிந்த விளக்கம்

தேசிய மக்கள் சக்தி, அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற சந்தர்ப்பத்தில் திறைசேரியில் 20 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே இருந்ததாகத் தொழிற்கல்வி பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்த கருத்துத் தொடர்பான சர்ச்சைக்கு மத்தியில் உத்தியோகபூர்வக் கையிருப்புக் குறித்த தகவல்களை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வெளிப்படுத்தியுள்ளார்.

காலியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துரைத்த தொழிற்கல்விப் பிரதி அமைச்சர் நளின் ஹேவகே, தங்களது அரசாங்கம் பதவியேற்ற போது திறைசேரியில் 20 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே இருந்ததாகவும் அந்த அளவு தற்போது 6.19 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பான விமர்சனங்கள் அதிகரித்திருந்த நிலையில், அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பில் இந்த விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.


இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உத்தியோகபூர்வமாக மத்திய வங்கியினால் அறிவிக்கப்படும் தரவுகளை மாத்திரம் கவனத்தில் கொள்ளுமாறு கோரியிருந்தார்.

அத்துடன் கடந்த 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் 2025 மார்ச் மாதம் வரையான உத்தியோகபூர்வக் கையிருப்புத் தரவுகளையும் அவர் வெளிப்படுத்தினார்.

இதன்படி, கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் உத்தியோகபூர்வக் கையிருப்பு 5.99 பில்லியன் அமெரிக்க டொலராகவும், ஒக்டோபரில் 6.47 பில்லியன் அமெரிக்க டொலராகவும், நவம்பரில் 6.45 பில்லியன் அமெரிக்க டொலராகவும் பதிவானதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன் 2024 டிசம்பரில் உத்தியோகபூர்வக் கையிருப்பு 6.12 பில்லியன் அமெரிக்க டொலராகவும், 2025 ஜனவரியில் 6.06 பில்லியன் டொலராகவும், பெப்ரவரியில் 6.08 பில்லியன் அமெரிக்க டொலராகவும், மார்ச் மாதம் 6.51 பில்லியன் அமெரிக்க டொலராகவும் பதிவானதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கோழி இறைச்சி, முட்டை விலைகள் அதிகரிப்பு





தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு இன்னும் ஒருவாரத்திற்கும் குறைவான காலப்பகுதியே காணப்படுகின்றது.

இந்த நிலையி, சந்தையில் கோழி இறைச்சி, மற்றும் முட்டையின் விலை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டிகைக் காலத்தில் அதிக கேள்வி எழுவதே இதற்குக் காரணம் என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

முட்டை ஒன்றின் சில்லறை விலை 39 ரூபா முதல் 41 ரூபா வரை நிலவுகிறது. ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 1100 ரூபா முதல் 1200 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் நாளைக்கு பின்னர் ஒரு கிலோ கிராம் மீனின் விலை அதிகரிக்கப்படும் என பேலியகொடை மீன் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 12 ஆம் திகதி பூரணை தினம் தவிர 13 ஆம் மற்றும் 14 ஆம் திகதிகளின் விற்பனை நிலையங்கள் திறந்து இருக்கும் என பேலியகொடை மீன் விற்பனை சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# தனியார்த்துறையினரின் சம்பள சட்டத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி

தனியார்த்துறையினருக்கான தேசிய குறைந்தபட்ச மாதாந்த வேதனம் மற்றும் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் என்பவற்றை அதிகரிப்பதற்காக தேசிய குறைந்தபட்ச சம்பள சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2025 ஆம் ஆண்டு வரவு – செலவு திட்டம் மூலம் அரச பணியாளர்களின் வேதன உயர்வுக்கு இணையாக தனியார்த்துறை ஊழியர்களின் சம்பளத்தையும் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் தனியார்த்துறையினருக்கான மாதாந்த குறைந்தபட்ச சம்பளம் 17,500 ரூபாயிலிருந்து 27,000 ரூபா வரை 9,500 ரூபாயினால் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை கடந்த முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் 700 ரூபாயிலிருந்து 1,080 ரூபா வரை 380 ரூபாயினால் அதிகரிப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

அதன்படி, 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தொழிலாளர்களுக்கான தேசிய குறைந்தபட்ச சம்பள சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.



## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று தெரிகின்றது.

பெரும்பாலும் தேர்தல் ஆணையம் சார்பில் சட்டமா அதிபர் தமது மேன்முறையீட்டை இன்று சமர்ப்பிப்பார் எனத் தெரிகிறது.

ஏற்கனவே உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில், அதை ஒட்டி அப்படியே இந்த மேன்முறையீடு தொடர்பில் விடயங்களை உயர் நீதிமன்றம் கையாள வேண்டி இருக்கும். அதனால் இன்றே இந்த மேன்முறையீட்டை காலையில் நேரத்தோடு தாக்கல் செய்து, மாலைக்கு இடையில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை பெற வாய்ப்பு இருப்பதாக சில சட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் பல வேட்புமனு நிராகரிப்புக்கு எதிரான தேர்தல் ஆட்சேபனை



வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நாளை எடுக்கப்பட இருக்கையில் இன்று உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணையத்தின் மேன்முறையீட்டை பரிசீலனைக்கு ஏற்று உத்தரவு ஒன்று வழங்குமானால், அடுத்து வரும் நாள்களில் ஏற்படக்கூடிய தேவையற்ற சட்ட இழுபறிகளைத் தவிர்க்கலாம் என்று அந்த சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் போன்றவற்றைக் குறுகிய காலத்தில் நடத்திக் களைத்துப் போய் இருக்கும் தேர்தல் ஆணையம், இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒட்டிப் பல நூற்றுக் கணக்கில் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குகள் வகை தொகை இன்றித் தாக்கலாகி சிக்கெடுப்பதால் இப்போது தடுமாறிப் போய் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவுகளினால் இந்த உள்ளூராட்சி தேர்தலைக் கட்டம் கட்டமாக நடத்தி, அதனால் காலம் மேலும் இழுபடும் சூழல் வந்தால், இனி வரக்கூடிய மாகாண சபைத் தேர்தலும் மேலும் பல காலம் தாமதிக்க வாய்ப்பு உண்டு.

\+ + +

நான்காவது முறையாக இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னைய மூன்று விஜயங்களுக்கு மாறாக இம்முறை ராஜபக்ஷகளில் எவரையும் சந்திக்கவில்லை என்று இப்பதியில் குறிப்பிட்டு இருந்தேன். ஆயினும் இளைய ராஜபக்ஷவான நாமலை அவர் நேற்று புதுடில்லியில் சந்திக்கக் கூடும் என நேற்று முன்தினம் சுட்டிக்காட்டி இருந்தேன்.

நான் கூறியபடி சந்திப்பு இடம் பெற்றிருக்கிறது. இருவரும் தனித்து ஆற அமர இருந்து உரையாடினார்களா என்று தெரியவில்லை. ஆயினும் புதுடில்லியில் நடைபெற்ற 'பாரத் எழுச்சி' மாநாட்டில் பங்கு பற்றச் சென்றிருந்த நாமலை அந்த மாநாட்டின் பக்க நிகழ்வொன்றில் இந்தியப் பிரதமர் அழைத்து பேசினார் என்று தெரியவந்தது.

## மீண்டும் சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியாழேந்திரன், பிணை நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாததால் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி நேற்று செவ்வாய்க்கிழமை, சந்தேகநபரான முன்னாள் இராஜாங்க அமைச்சரை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், பிணை நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்யத் தவறியதால், அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பொலனறுவைப் பகுதியைச் சேர்ந்த ஒரு தொழிலதிபரிடமிருந்து மணல் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்காக 15 இலட்சம் ரூபா இலஞ்சம் பெறுவதற்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் வியாழேந்திரன் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அவரைக் கைது செய்து, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியிருந்தது.

முதலில் அவர் ஏப்ரல் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், பின்னர் அவரது விளக்கமறியல் காலம் நேற்று வரை நீடிக்கப்பட்டிருந்தது.

நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டாலும், பிணைக் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியாததால், அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

## பிள்ளையான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் இருந்து சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டமைக்கான காரணம் கூறப்படாத நிலையில், பிள்ளையான்கொழும்புக்கு நேற்று இரவு அழைத்து வரப்பட்டுள்ளார்.

## தேசபந்துவை பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கையொப்பங்களுடன் கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, குற்றச் செயல்களின் வருமப்படிகள் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தின் பின்னர் குழு நிலையில் சட்டமூலம் ஆராயப்பட்டது. இதனைத் தொடர்ந்து மூன்றாவது மதிப்பீட்டையடுத்து வாக்கெடுப்பு இன்றி இந்தச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலம் 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.



# அரச சேவையில் அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது

அரச துறையில் 30,000 பேரை ஆட்சேர்ப்பு செய்யும் திட்டத்தின் கீழ் 18,853 பட்டதாரிகள் மற்றும் இளைஞர், யுவதிகளை ஆட்சேர்ப்பு செய்யும் பணிகள் துரிதப்படுத்தப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரச சேவையில் பல்வேறு நிறுவனங்களில் பணிக்குழாமினரை மீண்டும் மீளாய்வு செய்து, அத்தியாவசிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்காக விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்குப் பிரதமரின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் தற்போது அரச சேவையில் புதிதாக 18,853 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, நியமமான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளுக்கமைய அதற்கான விண்ணப்பங்களைக் கோரி குறித்த ஆட்சேர்ப்புக்களை செய்வதற்காக உரிய அமைச்சுக்கள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலின் எச்சரிக்கை

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகப் போர் சர்வதேச ரீதியாகப் பல நாடுகளுக்கு அமெரிக்க அதிபரினால் விரிவுபடுத்தப்பட்டுள்ள சூழலில், இந்தத் தொடர் நடவடிக்கைகளினால் இலங்கைக்குக் கடுமையான பொருளாதார விளைவுகள் ஏற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா சமீபத்தில் விதித்த பரஸ்பர வரிகள் மற்றும் தொடர் நடவடிக்கைகளின் விளைவாக இலங்கையில் வர்த்தகப் பதற்ற நிலை ஏற்படும், தொழிற்சாலைகள் பல மூடப்படலாம், பெரிய அளவிலான வேலையிழப்புகள் மற்றும் வர்த்தகப் பற்றாக்குறைகள் விரிவடையும் சூழல் உருவாகலாம், இது இலங்கையின் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை கடுமையாகப் பாதிக்கக்கூடும் என்று முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க சுட்டிக்காட்டி இருக்கிறார்.

தேசிய வரிக் கொள்கையைச் செயல்படுத்துதல், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் விரிவான பேச்சுகளில் ஈடுபடுதல், இந்தியாவோடு எக்ட்டா வர்த்தக ஒப்பந்தத்தை விரைவாக முன்னெடுப்பது குறித்து பேசுதல் உள்ளிட்ட உடனடிக் கொள்கை நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் நடவடிக்கையினால் இலங்கை எதிர்கொள்ளக் கூடிய பொருளாதார நெருக்கடி குறித்து பல தரப்பினரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். எச்சரித்து வருகின்றனர்.

இந்த ஆபத்தை எதிர்கொள்வதற்கு காத்திரமான நடவடிக்கைகள், முன்னாயத்தங்களை இலங்கை அரசு செய்வதாக வெளியில் தெரியவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை குறித்து இந்தப் பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி இலங்கை பொருளாதார ரீதியில் சற்று மூச்சு விடுவதற்கான ஒரு பெருவாய்ப்பு இது. இந்த வரிச்சலுகையை தக்க வைப்பதற்கு இலங்கை பல நடவடிக்கைகளை இன்னும் எடுக்க வேண்டி இருக்கின்றது. அவை குறித்து ஆளுந்தரப்பு கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

இந்த வரிச்சலுகையை தொடர்ந்து நீடிப்பதா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானிக்க வேண்டிய கால கட்டம் இதுதான். இந்தச் சமயத்திலாவது ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இதுவரை காலமும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் நடவடிக்கைகளை இலங்கை முன்னெடுத்தேயாக வேண்டும். இல்லையேல் இந்த ஆண்டோடு இந்த வரிச்சலுகையும் இழக்கப்பட, நாடு மீண்டும் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் விழுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

இனப் பாகுபாட்டை இல்லாமல் ஆக்குவதற்கான உறுதியான நடவடிக்கைகள், தொழிலாளர் நலன் மற்றும் மக்களின் அரசியல், சிவில் உரிமை-களை உறுதிப்படுத்துதல் போன்றவை தொடர்பான 27 சர்வதேச பட்டயங்களுக்கு அமைவாக இலங்கை செயற்பட்டால் மாத்திரமே இந்த ஜி.எஸ்.பி. வரிசலுகை நீடிக்கும் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு. அதனை தமது இப்போதைய எச்சரிக்கை அறிக்கையில் விலாவாரியாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

இந்த சர்வதேச பட்டயங்களில் பலவற்றை இலங்கை ஏற்றுக் கொண்டு ஒப்பமிட்டுள்ளது. எனினும் எஞ்சியவை தொடர்பில் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை நிலைப்பாடு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுவதை இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உறுதி செய்ய வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டு, ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை தக்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரணில் முன்னெச்சரிக்கை விடுக்கின்றார். அரசின் காதில் இவை எல்லாம் ஏறுமா? தெரியவில்லை.

# ஜூனில் தென்கொரியவில் ஜனாதிபதித் தேர்தல்





தென்கொரிய ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரிய ஜனாதிபதியாகப் பதவி வகித்த யூன் சுக்-யோல் அண்மையில் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

பதவி நீக்க நடவடிக்கையை அந்த நாட்டு அரசியலமைப்பு நீதிமன்றம் ஏகமனதாக உறுதி செய்ததைத் தொடர்ந்தே அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதன் மூலம் தென்கொரியாவில், 60 நாட்களுக்குள் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

எனவே 60 நாள் கால கட்டத்தின் கடைசி நாளான ஜூன் 3 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என தென்கொரியாவின் இடைக்கால ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

# ட்ரம்பின் வரி அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் சீனா உறுதி




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் உறுதியாக உள்ளதாகச் சீனா அறிவித்துள்ளது.

அத்துடன், அமெரிக்கப் பொருள்களைக் குறிவைத்துக் கூடுதல் "எதிர் நடவடிக்கைகள்" ஏற்படுத்தப்படும் எனச் சீனாவின் வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் அச்சுறுத்தல் விடுப்பதாகக் குற்றம் சாட்டியுள்ள சீன வர்த்தக அமைச்சு, அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தினால் சீனா இறுதிவரை அதை எதிர்த்துப் போராடும் என்றும் கூறியுள்ளது.

புதிய வரிகள், சீனாவிலிருந்து பொருள்களைக் கொண்டு வரும் சில அமெரிக்க நிறுவனங்களை 104 சதவீத வரியை எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கிறது.

அதேநேரம், உலகப் பொருளாதாரம் சமநிலையற்று காணப்படும் நிலையில், டொனால்ட் ட்ரம்பின் வரிவிதிப்பு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக பொருளாதார ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறாயினும், நேற்று பெரும்பாலான ஆசியச் சந்தைகள் உயர்ந்த நிலையில் தங்களது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தன.

எனினும், தாய்வானின் பங்குச் சந்தை மேலும் 4 சதவீதம் சரிவைக் கண்டதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# கொங்கோவில் கனமழை; 33 பேர் பலி, பலர் காயம்

கொங்கோவில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட வெள்ளத்தில் சிக்கி 33 பேர் உயிரிழந்துள்ளனர். மத்திய ஆபிரிக்க நாடான காங்கோ குடியரசின் தலைநகர் கின்ஷ ாசாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது.

இக் கனமழை காரணமாக பல ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அந்நாட்டில் 13 மாவட் டகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதாகவும், இதனால், 10 லட்சத் திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெள்ளப்பெருக்கினால் இது வரை 33 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கனமழை, வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க தேசிய பேரிடம் மீட்புக்குழுவினர், இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு மீட்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி பகுதிகளில் கனமழை நீடிக் கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.









# 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காத ஆளுநரின் செயல் சட்டவிரோதமானது

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பு



குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்திவைத்த தமிழக ஆளுநரின் செயல் சட்ட விரோதமானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழக அரசு அனுப்பிய 10 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்துவது தொடர்பாக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் பர்திவாலா மற்றும் மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பளித்தது.

சட்டப் பிரிவு 200 இன் கீழ், மசோதாக்கள் ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பப்படும்போது அவருக்கு மூன்று வாய்ப்புகள் உள்ளன. ஒன்று அவர், ஒப்புதல் வழங்குவது, இரண்டாவது ஒப்புதலை நிறுத்தி வைப்பது மூன்றாவது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவது.

பிரிவு 200 இன்படி, முதல் முறையாக மசோதா அனுப்பப்படும்போது அந்த மசோதாவை நிறுத்தி வைக்க விரும்பினால், மசோதாவில் உள்ள அம்சங்களை மறுபரிசீலனை செய்ய அல்லது திருத்தங்களை மேற்கொள்ள பரிந்துரைக்கலாம். அவ்வாறு பரிந்துரைத்து மீண்டும் சட்டப்பேரவைக்கு திருப்பி அனுப்ப வேண்டும். சபை மீண்டும் மசோதாவை நிறைவேற்றி ஆளுநரிடம் சமர்ப்பித்தால், ஆளுநர் அதன் பிறகு ஒப்புதலை நிறுத்தி வைக்க முடியாது. அவர் ஒப்புதலை வழங்க வேண்டும்.

அரசமைப்பில் ஆளுநருக்கு வீட்டோ அதிகாரம் கிடையாது. மசோதாக்கள் மீது முடிவெடுப்பதில் தேவையற்ற தாமதம் கூடாது. இரண்டாவது முறையாக மசோதா அனுப்பப்படும்போது அதனை குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைக்கும் வாய்ப்பு ஆளுநருக்கு இல்லை. ஆளுநர் தனது ஒப்புதலை வழங்க வேண்டும் என்பது சட்டத்தில் தெளிவாக உள்ளது.

10 மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்திவைத்த ஆளுநரின் நடவடிக்கை சட்டவிரோதமானது மற்றும் தன்னிச்சையானது, எனவே அந்த நடவடிக்கை ரத்து செய்யப்படுகிறது. 10 மசோதாக்கள் சட்டமன்றத்தால் மறுபரிசீலனை செய்யப்பட்ட பிறகு அவை மீண்டும் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து அந்த மசோதா அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

ஆளுநரின் ஒப்புதலுக்கான காலக்கெடு இல்லாத போதிலும், அவர் மசோதாக்களை காலவரையின்றி வைத்திருக்க முடியும் என்று அர்த்தமல்ல. அரசியலமைப்பில் நேரம் நிர்ணயிக்கப்படாத சந்தர்ப்பங்களில், முடிவு ஒரு நியாயமான காலத்திற்குள் எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அர்த்தம்.

ஆளுநர் மசோதாக்களை நிறுத்தி வைக்க ஃ ஒப்புதல் அளிக்க ஒன்று முதல் மூன்று மாதங்கள் வரை காலக்கெடுவை உச்ச நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது. பொது விதியாக, ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது.

ஆளுநர் மாநிலத்தின் முறையான தலைவர் என்றும் அவர் அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் கீழ் தனது அதிகாரங்களை பயன்படுத்துகிறார் என்றும் கடந்த கால அரசமைப்பு பெஞ்ச் முடிவுகளை உச்ச நீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.



# காற்று, சோலார் மின்சார உற்பத்தியில் 3 ஆம் இடத்திற்கு முன்னேறியது இந்தியா

கடந்த 2024 ஆம் ஆண்டில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிப்பதில் இந்தியா ஜெர்மனியை பின்னுக்கு உலகின் 3 ஆவது பெரிய நாடாக மாறியது.

புவி வெப்பமயமாதல் கடல் நீர்மட்டம் உயர்வு போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக, காற்று மின்சாரம் சோலார் எனப்படும் சூரிய சக்தி மின்சாரம் ஆகியவற்றுக்கு உலகம் முழுவதும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

குறிப்பாக சோலார் மின் உற்பத்திக்கு மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு இருக்கிறது. உலகளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி, பயன்பாடு குறித்து சர்வதேச ஆய்வு நிறுவனம் எம்பர், தகவல்களை சேகரித்து ஆய்வு மேற்கொண்டது.

அந்த நிறுவன அறிக்கையில் கூறியிருப்பதாவது: உலகளாவிய மின்சார உற்பத்தியில் 41 சதவீத மின்சாரம் கடந்த ஆண்டு அணு மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைகளில் உற்பத்தி செய்யப்பட்டது. 2024 இல் இந்தியா காற்று மற்றும் சூரிய சக்தி மூலமாக 215 (TWH) டெராவாட் ஹவர்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்துள்ளது. இந்த உற்பத்தித்திறன் கடந்த ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாக உயர்ந்துள்ளது.

மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியா மிகவும் தாமதமாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் இறங்கினாலும் அதிவேகத்தில் மின் உற்பத்தி திறனை அதிகப்படுத்தி வருகிறது. இதன் மூலம் உலக அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் மூன்றாம் இடத்தில் இருந்த ஜெர்மனியை பின்னுக்குத் தள்ளி இந்தியா அந்த இடத்தை கைப்பற்றியுள்ளது.

அதேநேரத்தில் முதல் இடத்தில் இருக்கும் சீனா 1826 (வுறுஉ டெராவாட் ஹவர்ஸ்யும், 2வது இடத்தில் இருக்கும் அமெரிக்கா 757 (வுறுஉ) டெராவாட் ஹவர்ஸ்யும் உற்பத்தி செய்துள்ளன. கடந்த 2024ம் ஆண்டு இந்தியாவின் மொத்த மின் உற்பத்தியில் 22 சதவீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் அணு மின்சாரம் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஆய்வு செய்த எம்பர் எரிசக்தி நிறுவன நிர்வாக இயக்குனர் மெக்டொனால்ட் கூறுகையில், உலகளாவிய சூரிய மின் உற்பத்தி மூன்று ஆண்டுகளில் இரட்டிப்பாகியுள்ளது. உலக அளவில் அதிகரித்து வரும் மின்சார தேவையை பூர்த்தி செய்வதில் இது மிகவும் முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.

## பாடசாலையில் தீ விபத்து: பவன் கல்யாணின் மகன் வைத்தியசாலையில் சேர்ப்பு



சிங்கப்பூரில் கல்வி கற்றுவரும் ஆந்திர துணை முதலமைச்சர் பவன் கல்யாணின் மகன் 'மார்க் சங்கர்', பாடசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்துள்ளார்.

8 வயதான மார்க் சங்கர் சிங்கப்பூரில் உள்ள பாடசாலை யொன்றில் கல்வி கற்று வருகின்றார். இந்நிலையில் அந்த பாடசாலையில் நேற்று முன்தினம் திடீரென தீபத்து ஏற்பட்டுள்ளது.

இத் தீவிபத்தில் காயமடைந்த மார்க் சங்கர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், மகனைப் பார்ப்பதற்காக தான் பங்கேற்க இருந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் இரத்து செய்துவிட்டு பவன் கல்யாண் சிங்கப்பூர் சென்றுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

## சட்டப்பேரவைக்கு கறுப்புச் சட்டை அணிந்து சென்ற அ.தி.மு.கவினர்



சபாநாயகருக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக தமிழக சட்டப்பேரவைக்கு நேற்று கறுப்புச் சட்டை அணிந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் சென்றுள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைக்கு நேற்று திங்கள் கிழமை சென்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் டாஸ்மாக் ஊழலை குறிப்பிடும் வகையில் "யார் அந்த தியாகி" என்ற பேட்ஜ் அணிந்து வந்தனர். தொடர்ந்து டாஸ்மாக் ஊழலை பற்றி விவாதிக்குமாறு பதாகைகளை ஏந்தி அமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து பேட்ஜ் அணிந்து அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை சட்டப்பேரவைத் தலைவர் வெளியேற்றி, முதல்வர் வேண்டுகோளுக்கு இணங்க சட்டப்பேரவையில் இருந்து ஒரு நாள் மட்டும் நீக்கம் செய்தார்.

இதையொட்டி நேற்று சட்டப்பேரவைக்கு வந்த எதிர்கட்சித் தலைவர் பழனிசாமி உள்ளிட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள், சட்டப்பேரவைத் தலைவரின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் கறுப்புச் சட்டை அணிந்து வருகை தந்து கவனம் ஈர்த்தனர்.

இதற்கிடையில் அ.தி.மு.கவினர் கறுப்புச் சட்டை அணிந்து வந்ததை விமர்சித்த முதல்வர் ஸ்டாலின், 'எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி காவி உடையில் பேரவைக்கு வராதது மகிழ்ச்சி' என்று கூறினார்.

# வவுனியா குடிநீர் திட்டத்தில் சுவீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட பதில் காணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை




"2010 - 2011 காலப்பகுதியில் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் போது சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக வழங்கப்பட்ட பதில் காணிகள் காட்டுப்பகுதியை அண்மித்துள்ளதாக உள்ளது. அந்த மக்கள் காட்டு யானைத் தொல்லையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அலுவல்கள் அமைச்சிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் வவுனியா நகரில் 2010 - 2011 இல் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது வயல் நிலங்கள், வீடுகள், வழிபாட்டிடங்கள் சுவீகரிக்கப்பட்டன.

இந்நிலையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 13 வருடங்கள் முடிவடைந்துவிட்டன. இத்தனை வருடங்களாக உறுதிக்காணிகளை வழங்கியவர்கள் தற்காலிக அனுமதிப்பத்திரத்துடன் உள்ளனர்.

இந்த திட்டத்திற்காக கையளிக்கப்பட்ட காணிகள் யானைகள் இல்லாத காணிகளாக இருந்த நிலையில், இதற்கு பதிலாக வழங்கப்பட்டுள்ள காணிகள் நடுகாட்டில் இருக்கும் நான்கு பக்கங்களிலும் இருந்தும் யானைகள் வந்து அழிவை ஏற்படுத்தக் கூடிய நிலைமை உள்ளது. ஆகவே இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

அங்கே மூன்று குளங்கள் இணைக்கப்பட்டுள்ள போதும் வயல்கள் குளத்தை விடவும் உயர்ந்த இடத்தில் இருப்பதால் விவசாயம் செய்ய முடியாமல் உள்ளன.

அத்துடன் 3 கிலோ மீற்றர் வீதியும் போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. வடக்கு மாகாண வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் ஒரு பகுதியை இதற்காக பயன்படுத்தி அந்த வீதியை மக்கள் பயணிக்கக்கூடிய வீதியாக மாற்ற வேண்டும்." என்றார்.

# வடமாகாண மல்யுத்த போட்டியில் தங்க வென்று சாதனை படைத்தது முல்லைத்தீவு மாவட்டம்







(பா.சதீசன்)

மாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தபட்ட வட மாகாண மல்யுத்த போட்டியானது முல்லைத்தீவு மாவட்ட உள்ளக அரங்கில் கடந்த ஞாயிற்று கிழமை இடம்பெற்றிருந்தது.

இந்த போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட ஆண்கள், பெண்கள் அணியினர் 15 தங்க பதக்கங்களை பெற்றதுடன் தொடர்ந்து 6 வருடமாக 1 ஆம் இடத்தினையும் பெற்று சாதனை புரிந்துள்ளனர்.

இந்த போட்டியில் முல்லைத்தீவு 5 தங்கம், 3 வெள்ளி பதக்கத்தினை பெற்று, 1ஆம் இடத்தினையும், யாழ்ப்பாண மாவட்டம் 3 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கல பதக்கத்தினை பெற்று 2ம் இடத்தினையும், வவுனியா மாவட்டம் 2 தங்கம், 2 வெள்ளி , 2 வெண்கலம் பதக்கத்தினை பெற்று 3ஆம் இடத்தினையும் பெற்றிருந்ததோடு, பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டத்தினர் 10 தங்கம் 1 வெள்ளி பதக்கங்களை தமதாக்கியிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வீரர்களுக்கான பயிற்சியை முல்லைத்தீவு மாவட்ட மல்யுத்த பயிற்றுனரும், வரலாற்று ஆசிரியருமான பி.ஜெயதர்சன் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடதக்கது.



# மாவைக் கந்தன் கும்பாபிஷேகத்துக்காக தருமபுரம் ஆதீனம் யாழ்ப்பாணம் வருகை

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்து கொள்வதற்காக இந்தியாவின் தருமபுரம் ஆதீனம் நேற்று பலாலி விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

யாழ்ப்பாணம் வந்த தருமபுரம் ஆதீனம் ஸ்ரீல ஸ்ரீ 27 ஆவது குருமகா சந்நிதானம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிக்கு விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாவை ஆதீனம் சார்பில் அச்சுவேலி, சிவாகம கலாநிதி சிவஸ்ரீ. கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள் பூரணகும்பம் வைத்து தருமபுரம் ஆதீனத்தை வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோவில் பிரதம சிவாச்சாரியார்



சிவஸ்ரீ முத்து ஸ்ரீநிவாச குருக்கள் மற்றும் திருநெல்வேலி

நீலாயாதாட்சி சமேத காயாரோகேணேஸ்வரர் தேவஸ்த்தானம் சிவஸ்ரீ சதா.சிவகுமாரக்குருக்கள், பிரம்மஸ்ரீசிவஆனந்தகிருஷ்ண சர்மா ஆகியோர் மாலை அணிவித்து ஆதீனத்தை வரவேற்றனர்.

தொடர்ந்து திருக்கேதீஸ்வரம் மற்றும் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் ஆலய அறங்காவலர்கள் மற்றும்லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய இணை ஸ்தாபகர் கலாநிதி அப்பையா தேவசகாயம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி ஆதீனத்தை வரவேற்றனர்.





# தேசியப் பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சி பெறும் அதிகாரிகள் கிழக்கு ஆளுநருடன் நேற்று சந்திப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகரவுக்கும் தேசியப் பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சி பெறும் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

பாதுகாப்பு அதிகாரிகள் தங்கள் கற்கைக் காலத்தில் திருகோணமலை மாவட்டத்திற்கு மேற்கொண்ட களப்பயணத்தின் போது ஆளுநருடன் ஒரு சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது, கிழக்கு மாகாணத்தில் நிலவும் சமூக மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆளுநர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார். மாகாணத்தில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்புத் துறை எந்த அளவிற்கு அதில் பங்களிப்புச் செய்யவேண்டும் என்பன குறித்து அவர் தனது கருத்துக்களை வெளிப்படுத்தினார்.







# ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் 10ஆவது கட்ட மடிகணினி வழங்கல்

ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் மாணவர்களுக்கு மடி கணினி வழங்கும் திட்டத்தின் 10ஆவது கட்ட விநியோகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 06ஆம் திகதி மாலை கொள்ளுப்பிட்டி ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உயர் கல்வியைத் தொடரும் மாணவர் ஒருவருக்கு அகில மலையகக் கல்வி அபிவிருத்திமன்றத்தலைவிதிருமதிசண்முகப் பிரியா கார்த்திக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மடிக்கணினி வழங்குகின்றமையையும் மடிக்கணினியை பெற்றுக் கொண்ட மாணவர்களுடன் புரவலர் ஹாஷிம் உமர், வசந்தம் தொலைக்காட்சி செய்தி முகாமையாளர் சித்தீக் ஹனீபா, சமூகஜோதி ரபீக், ஆகிப் மொஹம்மட், தொழிலதிபர் வாஜித் ஆகியோருடன் இணைந்து எடுத்துக்கொண்ட படத்தையும் காணலாம்





# அனுமதிப்பத்திரமின்றி 20 மாடுகளை லொறியில் கொண்டு சென்ற மூவர் பூவரசன்குளத்தில் கைது

**(கி.வசந்தன்)**

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மாடுகளை ஏற்றிச் சென்ற மூவர் கைது செய்யப்பட்டுளளமையுடன் 20 மாடுகளும் மீட்கப்பட்டுள்ளன என பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

வவுனியா, பூவரசன்குளம் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் லொறி ஒன்றை வழி மறித்து சோதனையில் ஈடுபட்டனர். இதன் போது அந்த லொறியில் அனுமதிப் பத்திரம் இன்றி 20 மாடுகள் கொண்டு செல்லப்பட்டமை கண்டறியப்பட்டது.

வாகனத்தில் இருந்தவர்களை கைது செய்த பொலிசார் 20 மாடுகளையும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். மாடுகள் மல்லாவிப் பகுதியில் இருந்து குருநாகல் பகுதிக்குல் கொண்டு செல்லப்பட விருந்தன எனத் தெரிவித்த பொலிஸார் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# வவுனியா பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் மஸ்தானின் தலைமையில் முதற்கட்டப் பேச்சு

(கி.வசந்தன்)

வவுனியா பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற் கான முதற்கட்ட முயற்சியாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற காதர் மஸ் தான் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது.

வவுனியா பல்கலைக்கழகத் தில் மருத்துவபீடம் ஆரம்பிப்ப தன் ஊடாக வவுனியா மாவட்ட அபி விருத்தி மற்றும் வவுனியா வைத்திய சாலையின் அபிவிருத்தி திட்டங் கள் உட்பட பல்வேறு அபிவிருத்தி முனைப்புகளை ஏற்படுத்த முடியும் என்கின்ற நோக்கத்தோடு நாடாளு மன்ற உறுப்பினர் மஸ்தானின் முயற்சியினால் முதற்கட்ட பேச்சுக்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினரோடு இடம்பெற்றிருந்தது.

இதேவேளை, பல்கலைக் கழகத் திற்கு மருத்துவபீடம் அமைக்கப்படு மாக இருந்தால் அதற்கான நிதிப் பலத் தைப் பெற்று கொள்வது தொடர்பிலும் அதன் சாத்தியப்பாடுகள் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினரால் கருத் துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு இருப்ப துடன் தொடர் நடவடிக்கைகளை மேற் கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியை பெறுவதற்கான ஏற்பாடுகளுக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வவுனியாப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ.அற்புதராஜா, நாடாளுமன்ற உறுப் பினரின் பிரத்தியேகச் செயலாளர், பல்கலைக்கழகத்தின் துறை சார் தலை வர்கள், வைத்தியர்கள், வவுனியா பிரதேச செயலாளர், சட்டத்தரணிகள் மற்றும் பல்கலைக்கழக செயற்பாடு களில் ஆர்வம் உள்ளவர்களும் பங்கு பற்றினர்.







# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# தேசியத் தலைவரின் மண்ணான வல்வெட்டித்துறையை ஜே.வி.பி. வென்றது என்ற மமதையை உடைக்க வேண்டும்

## அதற்காகத் தாம் தேர்தல் களத்தில் என்கின்றார் சிவாஜிலிங்கம்

**(பிரபாகரன் டிலக்சன்)**

வல்வெட்டித்துறைக்கு வருகைதந்த அநுர ஒரு தமிழ்த்தாயைக் கட்டிய ணைத்து நாடகமாடினார். தேசியத் தலைவரின் மண்ணான வல்வெட்டித் துறையை வெற்றிபெற்றுவிட் டோம் என்ற மமதையை அவர்களிட மிருந்து உடைக்க வேண்டும் என்ப தற்காகவே களத்தில் இறங்கியுள் ளேன் என தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளரும் தமிழ்த் தேசிய பேர வையின் வல்வெட்டித்துறை நகரசபை தலைமை வேட்பாளருமான எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பேரவையாக அகில இலங்கை தமிழ்க்காங்கிர ஸின் சைக்கிள் சின்னத்தில் யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுக கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் – நல்லூர் இளங்கலைஞர் மண்ட பத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாற. அவர் தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசிய பேரவையின் கூட்டான து தேர்தலை ஒட்டி இருந்தாலும் இது ஒரு தேர்தல் கூட்டு அல்ல. தற்போது தமிழினத்தை ஓர் இக்கட்டான சூழ்நிலை பீடித்திருக்கின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் சிங்களப் பேரினவாத கட்சிக்கு தமிழ் மக்களின் ஆதரவு கிட்டியிருக்கின்றது. எதிர்வரும் காலத்தில் இனப் பிரச்சனைக்கான தீர்வு விடயத்தை தமிழ் மக்கள் ஒற்றை யாட்சிக்குள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று முடக்குவதற்கான சதித் திட்டத்தை முறியடிக்கவே நாங்கள் அனைவரும் இணைந்துள்ளோம்.

வடக்கு, கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் ஒற்றையாட்சிக்கு ஆதரவு தெரிவிப்பார்கள் என்ற நிலைமை உருவாகுமாக இருந்தால் ஈழத்தமி ழர்களுடைய இத்தனை வருட கால போராட்டமும் – ஒரு இலட்சத்திற் கும் மேற்பட்ட பொதுமக்களின் உயிர்த் தியாகமும் – ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களின் உயிர் தியாக மும் – அர்த்தமற்றதாகிவிடும்.

தமிழரசுக் கட்சியின் எட்டு பாரா ளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றை யாட்சி ஆதரவு வழங்கினால் வடக்கு, கிழக்கு பதிகளுக்கு அவர்கள் வர முடியாதவாறு மக்கள் கொந்த ளிப்பை ஏற்படுத்த வேண்டும். கடந்த நல்லாட்சிக்காலத்தில் ஏக்கராஜ்ஜிய யாப்பை கொண்டுவந்து மக்களை ஏமாற்றினார்கள். அதனை தற்போது ஜே.வி.பி. முன்னெடுக்க இருக்கிறது. எனவே இக் காலகட்டத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றுபட வேண்டும்.

ஜே.வி.பியினுடைய இனவாத போக்கை நாடாளுமன்றத்தில் அரு கில் இருந்து நான் பார்த்திருக்கின் றேன். தற்போதைய ஜனாதிபதி அநுர குமார 2003இல் நாடாளுமன் றில் எனக்கு அருகில் உள்ள ஆசனத் திலே இருந்தவர். அவர் விடுதலைப்புலி களால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி நிர்வாகத்தை முறியடிக்கத் தீவிரமாக செயற்பட்டார்.

ஆனால் இன்று நல்லிணக்க முகமூடியோடு வலம் வருகிறார். எங்க ளுடைய மக்களும் அவரை நம்புகி றார்கள். திசைகாட்டி தவறான திசையை காட்டி தமிழர்களை ஏமாற்றப்போகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ ருக்கு உதவி கிடைக்கக் கூடாது என சுனாமி கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி. பி. தீவிரமாகச் செயற்பட்டது. இலங்கை இராணுவத்திற்கு ஜே.வி.பி. படைகளைத் திரட்டிக் கொடுத்தது என்பதை அநுர குமாரவே பகிரங்கமாக அறிவித்தார். அந்த இராணுவம்தான் எங்கள் மீது இனப்படுகொலை புரிந்தது. எங்கள் சகோதரிகளை கற்பழித்து படுகொலை செய்தது. ஜே.வி.பிதான் வடக்கு கிழக் கையும் நீதிமன்றம் சென்று பிரித் தது. இவர்களுக்காக உங்கள் வாக்கு?

உள்ளக விசாரணை மூலம் நீதியை பெறமுடியாது. சர்வதேச விசாரணை வேண்டும். பொது வாக்கெடுப்பு மூலம் சுயநிர்ணய உரிமையை வென்றெ டுக்கக்கூடிய வகையில் நாம் முன்னேற வேண்டும்.

வல்வெட்டித்துறைக்கு வருகை தந்த அநுர ஒரு தமிழ்த்தாயைக் கட்டியணைத்து நாடகமாடினார். தேசி யத் தலைவரின் மண்ணான வல்வெட் டித்துறையை வெற்றிபெற்றுவிட் டோம் என்ற மமதையை அவர்களிட மிருந்து உடைக்க வேண்டும் என்ப தற்காகவே களத்தில் இறங்கியுள்ளேன். நிச்சயமாக மக்கள் உணர்ந்து எங்களை வெற்றிபெறச் செய்வார்கள். – எனத் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# இது உள்ளூராட்சி தேர்தல் அல்ல; தமிழ் தேச இருப்புக்கான தேர்தல்!

## இப்படிக் கூறுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(பிரபாகரன் டிலக்சன்)

உயிரா, உரிமையா என்ற தெரிவு முன்னால் இருந்த போது உயிர் போனாலும் உரிமையை கைவிட முடியாது என்ற முடிவு தான் எடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட சூழலிலும் தமிழ்த் தேசத்தினுடைய உரிமைப் பயணத்தை எதிரியால் தோற்கடிக்க முடியவில்லை. ஆனால் இன்று தமிழ்த் தேசியத்தினுடைய உறுதிப்பாடு தள்ளாடிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. – எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பேரவையாக அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுக கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் – நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் தமிழ் தேசியத்திற்கு இதுவரை காலமும் காணாத சவாலை ஏற்படுத்தியிருக்கின்றது. சரித்திரத்தில் முதற்தடவையாக, மஹிந்த தரப்பு தமிழின அழிப்பை செய்வதற்கு மிகத் தீவிரமாக ஆதரவு கொடுத்துக்கொண்டிருந்த இனவாதத்தை அரசியல் தத்துவரீதியாக கொண்டு செயற்பட்ட ஜே.வி.பியினரின் முகவர் அமைப்பாக செயற்படக்கூடிய தேசிய மக்கள் சக்தி தமிழர் தாயகத்திலும் மிக பலமான ஆணை பெற்றதாகக் கூறக்கூடிய ஒரு நிலைமை காணப்பட்டது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி எங்களுடைய விடுதலைப் போராட்டம் உயிர் ரீதியாக அழியாமல் இருப்பதாக இருந்தால், கொள்கையை கைவிட்டு ஒற்றையாட்சிக்கு இயங்குவதற்கு தயார் என்ற செய்தியை கொடுத்திருந்தால், எம்மோடு பலர் உயிருடன் இருந்திருப்பார்கள்.

உயிரா, உரிமையா என்ற தெரிவு முன்னால் இருந்த போது உயிர் போனாலும் உரிமையை கைவிட முடியாது என்ற முடிவுதான் எடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட சூழலிலும் தமிழ்த் தேசத்தினுடைய உரிமைப் பயணத்தை எதிரியால் தோற்கடிக்க முடியவில்லை. தமிழர்களுக்கு எதிராக இனவழிப்பை மேற்கொண்ட போதும் தமிழர்களுடைய தமிழ்த் தேசத்தினுடைய உரிமைத் தாகம் அழிக்க முடியாமல் மிகப் பலமாக அன்று இருந்தது.



தற்போது 15 வருடங்களுக்குப் பின்னர் கடந்த தேர்தல் முடிவினால் தமிழ்த் தேசியத்தினுடைய உறுதிப்பாடு தள்ளாடிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. இதுவரைக்கும் இல்லாத சவாலை தமிழ்த. தேசியம் எதிர்நோக்கியுள்ளது. ஆனால் அதே நேரம் இந்தத் தேர்தலின் முடிவுகள் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

தமிழரசுக் கட்சிக்கு மக்கள் வாக்களித்தாலும் யாரை தோற்கடிக்க வேண்டும் என்பதில் மக்கள் உறுதியாக இருந்திருக்கிறார்கள். எதிரியை தோற்கடிக்க வேண்டும். ஆனால் அதற்கு முன் வீட்டிற்குள் இருக்கும் கிருமியை அகற்றாதுவிட்டால் எதிரியோடு நாங்கள் போர் செய்யமுடியாது.

தமிழ் தேசிய நிலைப்பாட்டோடு மிகவும் உறுதியாக பயணிக்ககூடிய ஏனைய கட்சித் தலைவர்கள், இயக்கங்கள், பொது அமைப்புகளோடு நாங்கள் பேசி கொள்கை ரீதியான ஒற்றுமையை ஏற்படுத்தி, அந்த ஒற்றுமை நிலைப்பாட்டுக்கு தடையாக இருப்பவர்களுக்கு இருப்புப் பிரச்சினையை ஏற்படுத்துவதன் மூலமே தமிழ்த் தேசிய அரசியல் அபிலாசைகளை முன்னெடுக்க முடியும்.

அந்த அடிப்படையில் கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னரே தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் நிலைப்பாட்டோடு ஒன்றித்து போகக்கூடிய கட்சிகளை இணைப்பது பற்றிய முடிவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மத்தியகுழு எடுத்தது.

கடந்த 15 வருடங்களாக இந்த தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை உருவாகக் கூடிய சூழல் இல்லாது இருந்ததால் முன்னணியின் உறுப்பினர்கள் கூட ஒற்றுமை ஆபத்தானது என்று கேள்வியையும் எழுப்பியிருந்தார்கள். ஆனால் அந்த கேள்வி பிழையில்லை. ஏனெனில் எங்களுடைய அரசியல் அந்த அளவு தூரத்திற்கு நாற்றமடிக்கின்றது. யார் நேர்மையாக செய்யப்பட்டார்கள், யார் நேர்மையாக செயல்படவில்லை என்று நேர்மையை பற்றி கதைக்க முடியாத அளவிற்கு தமிழ் தேசிய அரசியல் நாற்றமடிக்கின்றது. அப்படியான ஒரு நிலைமையை திட்டமிட்டு உருவாக்குகிறார்கள். அப்போதுதான் தமிழ் தேசிய நீக்க அரசியலை அவர்கள் சுலபமாக மேற்கொள்ளலாம்.

நாங்கள் பலமான தமிழ்த் தேசிய அரசியலை கொண்டுசெல்ல தயாராக உள்ளோம். எங்கள் கூட்டணி பலமடைந்தால் தமிழ்த் தேசம் வளரும். தமிழ் தேசிய அரசியல் பார்வையில் உள்ளூராட்சி தேர்தல் என்பது ஓர் உள்ளூராட்சி தேர்தல் அல்ல. மாறாக இது தமிழ் தேச இருப்புக்கான தேர்தல். இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தென் தமிழ் தேசத்தில் முஸ்லிம் மக்களோடு ஒரு புரிந்துணர்விற்கு நாங்கள் போக வேண்டும். அவர்களுக்கும் அது நன்றாக புரியும். போர் நடைபெற்று முடிந்த கையோடு முஸ்லிம் சமூகம் இலக்காகியது. முஸ்லிம் மக்களின் நிலங்களும் அபகரிக்கப்படுகின்றன. தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். தமிழ்த் தேசம் தமிழர்களுக்கு தயாகமாகவுள்ளது போல் முஸ்லிம் மக்களுக்கும் அந்தஸ்தை வழங்கி அவர்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் அவர்களுடன் கைகோர்க்க வேண்டும். அவ்வாறு செய்தால் தமிழர் தாயகமாக கருதக்கூடிய வடகிழக்கை எவராலும் அசைக்கமுடியாது.

இந்த கோட்பாட்டை எங்களுடைய பெருந் தலைவர்கள் 75 வருடங்களுக்கு முன்னரே முன்வைத்து விட்டனர். ஆனால் கடந்த 15 வருட செயற்பாடுகள் இதனை சிதைந்து விட்டது. இந்த சந்ததி இதனை மாற்ற வேண்டும். அடுத்த சந்ததிக்கு இந்த சுமையை பாரம் கொடுத்தால் தமிழ்த் தேசிய இருப்பு படிப்படியாக குறைவடையும். – என்றார்.




# வவுனியாவில் தேசிய மக்கள் சக்தியின் வட்டார தேர்தல் அலுவலகங்கள் திறப்பு!

(கி.வசந்தன்)

தேசிய மக்கள் சக்தியின் வட்டாரத் தேர்தல் அலுவலகங்கள் பல பகுதிகளிலும் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரப் பணிகள் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், வவுனியா மாநகரசபைக்குட்பட்ட கடைத்தொகுதி வட்டாரம் -06 இல் தேசிய மக்கள் சக்தி சார்பாக முன்னாள் நகரசபை உறுப்பினர் நா.லக்ஸனா நேரடி வேட்பாளராக போட்டியிடுகின்றமையுடன், ரவிச்சந்திரன் பட்டியல் வேட்பாளராக போட்டியிடுகிறார்.

அவர்களது வட்டார அலுவலகம் கற்குழியில் திறந்து வைக்கப்பட்டது. இதன் போது தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, வைரவபுளியங்குளம், பூந்தோட்டம் பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்தி பிராந்தியக் காரியாலங்கள் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# இன்றைய ராசி பலன்கள் - 09.04.2025




இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். சௌகரியங்கள் குறைந்து காணப்படும். பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம். எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணிகள் இன்று சற்று கடினமாக இருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் சில மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நல்லுறவு ஏற்படும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள சிறிய அளவிலான கடன் பெறுவீர்கள். இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல.

தேவையற்ற மனக் கவலைகள் காரணமாக நீங்கள் தலைவலிக்கு ஆளாக நேரலாம்.




இன்று பயணங்கள் ஏற்படலாம். இன்றைய செயலகளை கவனமாக கையாளவும். எந்தச் செயல் செய்தாலும் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கவும்.

இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் சிறிது பதட்டம் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதற்கேற்றவாறு நடந்து கொண்டு ஒற்றுமையாய் இருங்கள்.

ஆன்மீக பயணங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.




உங்கள் பணிகளை எளிதாகச் செய்வீர்கள். இன்று நன்மைகள் ஏற்படும். உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் நாள்.

பணியிடத்தில் அனைத்தும் சுமுகமாக இருக்கும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியில் வெற்றி கிடைக்கும். திருப்திகரமான நிலை இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பிற்கு எடுத்துக் காட்டாய் விளங்குவீர்கள். உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களை புத்திசாலித்தனத்துடன் செய்ய வேண்டும். தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் சிறிது கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் செய்யும் செயலில் கூடுதல் முயற்சி தேவை.

பணிகள் அதிகமாக காணப்படும். தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாகப் பணிகளை கையாளவும்.

உங்கள் துணையிடம் அதிருப்தி காண்பீர்கள். இன்று சிறிது நேரம் உங்கள் பிரியமானவரோடு பேசுவதை தவிர்க்கவும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். திட்டமிட்டு பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

பதற்றம் காரணமாகத் தொடைகளில் வலி காணப்படும்.




உங்கள் மனது ஆன்மீக ஈடுபாடு கொண்டிருக்கும். அதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு மன ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றுவதில் தடைகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்றுவது சிறந்தது.

புரிந்துணர்வின் குறைபாடு காரணமாக உங்கள் துணையிடம் வாக்குவாதம் செய்வீர்கள். நல்ல புரிந்துணர்வை வளர்க்க அவர் உணர்வுக்கும் இடம் கொடுங்கள்.

பணத்துக்கான அதிர்ஷ்டம் குறைவு. இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும்.

உங்கள் உடன் பிறந்தோரின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று சில தடைகள் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். நேர்மறை எண்ணத்தை வளர்த்துக் கொள்ளவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சுமுகமான பலன்கள் கிடைக்க சிறப்புடன் திட்டமிட வேண்டும்.

மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டால் அனைத்தும் சிறப்புடன் நடக்கும்.

நிதிநிலைமை இறுக்கமாக காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று அசௌகரியமாக உணர்வீர்கள்.




இன்று சிறந்த நாளாக இருக்கும். உங்கள் செயலில் வளர்ச்சியும் வெற்றியும் பெறுவீர்கள். உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும்.

உங்கள் பணிகள் இன்று சுமுகமாக நடக்கும். புதிய வாய்ப்புகள் காணப்படும். அதனை உங்கள் நலனுக்கு பயன்படுத்தலாம்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இருவரும் மகிழ்ச்சியான வார்த்தைகளை பகிர்ந்து கொள்ளும் மனநிலையில் இருப்பீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் போதியதாக இருக்கும். அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும். இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சிறப்பான வெற்றி காணப்படும். உங்களின் அனுசரனையான வார்த்தைகளின் மூலம் பிறரை கவர்வீர்கள். உங்களிடம் காணப்படும் வெற்றி காரணமாக நீங்கள் உச்சத்துக்குச் செல்வீர்கள்.

பணியிடத்து சவால்களை எளிதாக சமாளிப்பீர்கள். உங்கள் பணிகளை செய்யும்போது அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இருவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். நல்ல பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.04.2025




ஆன்மீகத்தில் மிகுந்த நாட்டம் கொண்டவர்களாக இருப்பீர்கள். அது உங்களுக்கு ஆறுதலைத் தரும். உங்கள் எண்ணங்களில் தெளிவு காணப்படும்.

பணியிடத்தில் பலன்கள் கலந்து காணப்படும். ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் கவனமாகப் பழக வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நல்லுறவைப் பேண இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு மிதமாக காணப்படும். இன்று சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் கண்களை பரிசோதித்துக் கொள்ளுங்கள். உங்கள் முகத்தில் முகப்பரு வர வாய்ப்புள்ளது.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் கடின முயற்சியால் வளர்ந்து வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பணியில் புதிய கருத்துக்களை கொணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் உங்கள் பிரியமானவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

இன்று நிதிவளர்ச்சி கானப்படுகின்றது. உங்கள் சேமிப்பை உயர்த்த முடியும், பண இருப்பை நன்கு பராமரிக்க முடியும்.

நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




உங்கள் செயல்களில் கவனமாய் இருக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டாம். அது உங்கள் விருப்பத்தை அடைவதில் தடை ஏற்படுத்தும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. தவர்கள் நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். தகவால் பரிமாற்றத்தின் போது கவனம் தேவை.

பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும். பணத்தைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.




ஆரம்பத்தில் சில தடைகளை சந்தித்த பின்னர் உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். இன்றைய நாளை நீங்கள் நல்ல விதத்தில் பயன்படுத்துவீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளின் மூலம் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

துணையிடம் நேர்மறையான எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

தியானம் அல்லது பிரார்த்தனை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பில் வவுனியாவில் ஊடகவியலாளர்களுடன் நேற்றுக் கலந்துரையாடல்











**(கி.வசந்தன்)**

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வவுனியா ஊடகவியலாளர்களுக்கும் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறை, பெண் பிரதிநிதித்துவம் தெரிவு செய்யும் முறை, பட்டியல் ஆசனம் வழங்கப்படும் முறை மற்றும் தேர்தல் முன்னாயத்த செயற்பாடுகள் குறித்து ஊடகவியலாளருக்குத் தெளிவுபடுத்தப்பட்டதுடன், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் இதன்போது பதில் வழங்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் மற்றும் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.அரவிந்தன், தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.